செய்தி வெளியீடு எண்: 510 நாள் : 15.10.2015

செய்தி வெளியீடு

சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்தின் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிவதற்கு பிஎஸ்சி/எம்எஸ்சி தேர்ச்சியுடன் குறைந்தபட்சம் ஒரே துறையில் இரண்டு வருட பணி அனுபவம் மற்றும் 32 வயதிற்குட்பட்ட மகளிர் செவிலியர்களுக்கான நேர்முகத் தேர்வு புதுடில்லியில் 17.10.2015 முதல் 19.10.2015 வரையிலும், ஹைதராபாத்தில் 21.10.2015 & 22.10.2015 ஆகிய நாட்களிலும் மற்றும் பெங்களூருவில் 24.10.2015 முதல் 27.10.2015 வரையிலும் நடைபெற உள்ளது. 10, 12ஆம் வகுப்பில் 70 விழுக்காடு மதிப்பெண் மற்றும் பிஎஸ்சியில் 60 விழுக்காடு மதிப்பெண் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இரண்டு வருட பணி அனுபவமுள்ள பிஎஸ்சி செவிலியர்களுக்கு ரூ.75,000/ – மற்றும் எம்எஸ்சி செவிலியர்களுக்கு ரூ.1,00,000/– ஊதியமாக வழங்கப்படும். மேலும், இலவச விமான டிக்கெட் & தங்குமிடம், இலவச போக்குவரத்து வசதி , வருடத்திற்கு 30–45 நாட்கள் விடுப்புடன் கூடிய முன்பண சம்பளம் மற்றும் பிற சலுகைகள் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணிக்கு விருப்பமும் தகுதியும் இருப்பின் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் ஆகியவற்றுடன் ஒரு புகைப்படத்தை தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் ovemclsn@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 20.10.2015க்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, 044–22502267/22505886/08220634389 என்ற தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள் மூலமாகவும் அல்லது www.omcmanpower.com என்ற இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

**நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
**சென்னை**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**